# அறிவியல் நகரம்

## உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025.


கடித எண். 1635 / அ ந / அறிவிப்புகள் / மு. அ. அ. (2) / 2022 நாள் 17.02.2022

பெறுநர்:

ஆணையர் அவர்கள்
பள்ளிக்கல்வித் துறை
டி. பி. ஐ. வளாகம்
சென்னை – 600 006

அய்யா,

பொருள்: அறிவியல் நகரம், சென்னை – 25 – "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020–2021" – முன்மொழிதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை எண். 192 உயர்க்கல்வித் (பி2) துறை, நாள் 13.08.2018

-------

மேற்கண்ட அரசாணையின்படி, அறிவியல் நகரம் 2018–19 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது"–னை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு / அரசு உதவிப் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும், அதன் ஊடாக மாணாக்கர்களை எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் அறிவியலாளர்களாக உயர்த்துவதற்கும், அறிவியல் நகரம் 2018–19–ஆம் ஆண்டு முதல் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது"–களை வழங்கி வருகிறது. இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் 10 ஆசிரியர்களுக்கு தலா ரூ. 25,000/–க்கான காசோலை (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்விருதிற்கு கீழ்க்கண்ட ஐந்து பாடப்பிரிவுகள் அறிவியல் நகரத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது:

1. கணிதம்
2. இயற்பியல்
3. வேதியியல்
4. உயிரியல் மற்றும்
5. புவியியல் / கணினி அறிவியல் / வேளாண் நடைமுறைகள்




தொலைபேசி : 044-29520142, 29520143, நிகரி : 044-29520142

மின்னஞ்சல்: scicitychennai@gmail.com, engumariviyal@gmail.com இணையதளம் : www.sciencecitychennai.in

அறிவியல் நகரம்
சென்னை

# அறிவியல் நகரம்

## உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025.

இவற்றுள் ஐந்து விருதுகள் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும், மேலும் ஐந்து விருதுகள் பொதுப்பிரிவில் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பிரித்து வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப்படிவம், விண்ணப்பிக்க தொடர்பான விதிகள் ஆகியவைகளை www.sciencecitychennai.in என்ற அறிவியல் நகர இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சிறந்த மாணவர்களை உருவாக்குவதிலும் – செம்மைப்படுத்துவதிலும் ஆசிரியர்களுடைய பணி அளப்பரியது. குறிப்பாக அறிவியல் ஆசிரியர்கள் மாணவர்களிடம் குவிந்து கிடக்கும் அளப்பரிய அறிவியல் ஆற்றலை வெளிக்கொணர்வதிலும் – அவர்களை அறிவியலாளர்களாக உயர்த்துவதிலும் குறிப்பிட்ட தகுந்த பங்கினை ஆற்றுகிறார்கள். அத்தகைய ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை எடுக்கும் ஆசிரியர்களுக்கு “சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது” வழங்கப்பட்டு வருகிறது.

2020–21–ஆம் ஆண்டிற்கான “சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது” வழங்க ஏதுவாக மேல் குறிப்பிட்டுள்ள ஐந்து வகைப் பாடப்பிரிவுகளில், பாடப்பிரிவுக்கு ஒன்று வீதம் ஒரு மாவட்டத்திற்கு ஐந்து பாடப்பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியர்களின் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தலைமை ஆசிரியர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் ஆணையர், பள்ளிக் கல்வித் துறை அவர்களின் வழியாக அறிவியல் நகரத்திற்கு 07.03.2022 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும் வண்ணம் தங்கள் கீழ் பணிபுரியும் அலுவலர்களை அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(ஒ.ம்.) திருமதி. க. லட்சுமி பிரியா, இ. ஆ. ப.,
துணைத்தலைவர் (பொறுப்பு)

17/02/22
முதுநிலை அறிவியல் அலுவலர்

இணைப்பு: விண்ணப்பப்படிவம் மற்றும் விதிமுறைகள்

நகல்: அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்



தொலைபேசி : 044-29520142, 29520143, நிகரி : 044-29520142
மின்னஞ்சல்: scicitychennai@gmail.com, engumariviyal@gmail.com இணையதளம் : www.sciencecitychennai.in